DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 5/2025
P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மோகனசுந்தரி |
| Husband's/ Name | : | திரு.பிரபு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 34 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் மருங்காபுரி தாலுக்கா மஞ்சம்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது கணவர் பிரபு மணப்பாறையில் டீ மாஸ்டராக வேலை பார்த்துவருகிறேன். நான் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். எனது கணவர் இந்து முத்துராஜா வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் இந்து முத்துராஜா வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். நானும் எனது கணவரும் கலப்பு திருமணம் செய்து கொண்டோம். எனது மாமனாருக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். நானும், எனது கணவரும் கலப்பு திருமணம் செய்ததை என் மாமனார் வீட்டில் ஏற்று கொண்டு விட்டார்கள். நான் குடியிருக்கும் இடத்தில் குடியிருக்கக் கூடாது என்று ஆரம்ப காலத்தில் இருந்தே எதிரிகள் எனக்கு இடையூறு செய்து வந்தார்கள். என்னை பார்த்து இந்த பள்ளத் தேவிடியா இருக்க கூடாது என்று எதிரிகள் கூறிவந்தார்கள். நான் ஏற்கனவே எதிரிகள் மீது பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் மீது புகார் கொடுத்தேன். என் கணவர் வேலைக்கு சென்று விட்டு திரும்பி வரும் வரை நான் என் குழந்தைகள் உடன் தனியாக வசித்து விவசாயம் செய்து வந்தேன். நான் விவசாயம் செய்யும் போது டிராக்டர் வண்டியை வரவிடாமல் வண்டியை கொண்டு வருபவரிடம் வம்பு

இழுப்பார்கள். கடந்த 21.10.2024-ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு சின்னதங்கம் என்பவர் எனது தோட்டத்தில் மாடு மேய்த்துக்கொண்டு இருந்தார். அந்த அம்மா என் தோட்டத்தில் மாடு மேய்ப்பதை பார்த்து கொண்டு இருந்த மணி என்ற அடைக்கன் இந்த இடத்தில் மாடு மேய்க்கக் கூடாது அந்த அம்மாவிடம் சத்தம் போட்டார். எனது கணவர் வேலை முடித்து வந்தவுடன் இரவில் அவரிடம் தெரிவித்தேன். நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கி விட்டதாகவும் இந்த இடத்தில் இன்னும் கொஞ்சம் நாள்தான் நாங்கள் இருப்போம் என்று சொல்லி அசிங்கம் அசிங்கமாக பேசினார்கள். கடந்த 22.10.2024ம் தேதி காலையில் என் கணவர் எதிரிகளிடம் எனது மனைவியை தனியாக விட்டுவிட்டு செல்கிறேன். எதுவென்றாலும் என்னிடம் பேசுங்கள் என்று கூறினார். இந்த இடத்தை விட்டு எதற்கு என்னை போகச் சொல்கிறீர்கள் என்றும் கேட்டார். அதற்கு மணி என்ற அடைக்கன் நான் அப்படித் தான்டா பேசுவேன், உன்னை இந்த இடத்தில் இருக்க விட மாட்டேன் என்று கூறினார். வாக்குவாதம் அதிகம் ஆன உடன் நான் என் கணவரை அழைத்து வந்தேன். மறுநாள் காலையில் வழக்கம் போல் என் கணவர் வேலைக்கு சென்று விட்டார். அன்று நானும், எனது மகளும் வீட்டில் தனியாக இருந்தோம். அப்போது மாலை 3.00 மணி இருக்கும். எதிரிகள் அவர்கள் தோட்டத்தில் உள்ள மாட்டை அவிழ்க்க வந்தார்கள். நான் என் வீட்டின் அருகில் இருந்தேன். அப்போது எதிரிகள் என்னைப் பார்த்து பள்ளத் தேவிடியா உன்னை இங்கு இருக்க விட மாட்டோம் என்று கூறினார்கள். நான்கு பேரும் கூடி நின்று என்னை அசிங்க அசிங்கமாக கேவலமாக பேசினார்கள். நான் பயந்து போய் விட்டிற்கு சென்று விட்டேன். அப்போது எதிரி முத்து லெட்சுமி வாடி இப்போது வெளியே வந்து பேசு என்றாள். என்னை அசிங்மாக திட்டினாள். அவர்கள் மூவரும் சேர்ந்து என்னை அடிப்பதற்கு எனது இடத்திற்கு வந்தார்கள். நான் அடித்து பாருங்கள் என்று சொன்னதற்கு முத்துலட்சுமி எனது தலைமுடியை பிடித்து இழுத்து மூவரும் அடித்தார்கள். அப்போது மணி என்ற அடைக்கன் எனது வயிற்றில் எட்டி உதைத்தார். எதிரி லட்சுமி பக்கத்தில் கிடந்த குச்சியை எடுத்து என்னை அடித்தாள். சம்பவத்தை அருகில் இருந்தவர்கள் அனைவரும் பார்த்தார்கள். அருகில் இருந்த சின்னதங்கம் பார்த்தாள். எனது கணவர் மணப்பாறையில் இருந்தவருக்கு தகவல் சொன்னேன். அவர் மூலமாக துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன். அங்கு உள்நோயாளியாக இருந்த போது நடந்த சம்பவத்திற்கு துவரங்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். அந்த புகார் மனு அரசு தரப்பு சான்றாவணம் 1 ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நானும் என் கணவரும் காதல் திருமணம் செய்து 9 வருடங்கள் ஆகிறது .திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் கணவன் மனைவியாக உடுமலைப்பேட்டையில் குடும்பம் நடத்தி வந்தோம். அதன் பிறகு ஒரு வருடம் மணப்பாறையில் வசித்து வந்தோம். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அதில் ஒரு குழந்தை உடுமலைப்பேட்டையில் வைத்து பிறந்தது. இரண்டாவது குழந்தை மணப்பாறை அரசு மருத்துவமனையில் வைத்து பிறந்தது. எனது மூத்த மகனுக்கு ஏழு வயது நடைபெறுகிறது. எனது இரண்டாவது குழந்தையான பெண் குழந்தைக்கு தற்போது இரண்டரை வயது நடைபெறுகிறது .எனது கணவரின் குடும்பத்தினர் நான் என்ன சாதியைச் சேர்ந்தவர் என்பதை தெரிந்து கொண்டு என்னை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். எனது கணவரின் குடும்பத்தினர் அம்மா பட்டியில் வசித்து வருகிறார்கள். எனது கணவரின் குடும்பத்தினர் எங்களை எதற்கு அம்மா பட்டியில் வசிக்க அனுமதிக்கவில்லை என்றால் அங்கு போதிய வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் அனுமதிக்கவில்லை.அங்கு போதிய வசதிகள் இருக்கிறது என்றும் நான் வேறு சாதியைச் சேர்ந்தவர் என்ற பாகுபாடை என் கணவர் குடும்பத்தினர் பார்த்த காரணத்தினால் தான் எங்களை அம்மா பட்டியில் குடியிருக்க அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் குடும்பத்திற்கும்,என் கணவர் குடும்பத்திற்கும் இடையில் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது.நான் காவல் நிலையத்தில் கொடுத்த முந்தைய புகாரில் எதிரிகள் குடும்பத்திற்கும் என் கணவரின் குடும்பத்திற்கும் இடையில் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனை இருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கில் கொடுத்த புகார் வாக்குமூலத்திலும், இடம் மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனை இருப்பதை குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் இல்லை. என் கணவர் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடம் மற்றும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருப்பதாக குறிப்பிட்டு ஒரு புகார் வாக்குமூலம் இந்த நீதிமன்றத்தில் காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்டு இருந்தால் அது என்னால் கொடுக்கப்பட்டது கிடையாது என்றால் சரிதான். நான் ஏற்கனவே இதே எதிரிகள் மீது பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கொடுத்த புகாரின் அடிப்படையிலான வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான்.நான் தற்போது வசித்து வரக்கூடிய வீடு என் கணவர் குடும்பத்திற்கு சொந்தமானது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கநான் அன்று மாலை 3.30 மணி முதல் 4.30 மணிக்குள்

வீட்டிற்கு சென்று விட்டேன். நான் வீட்டுக்குச் சென்று போய் பார்த்தபோது சின்ன தங்கம் என்பவர் மட்டும் இருந்தார். நான் குடியிருந்து வரக்கூடிய இடத்திற்கும் என் அப்பா குடியிருந்து வரக்கூடிய இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் முக்கால் கிலோ மீட்டர் இருக்கும். நான் குடியிருப்பது மஞ்சம்பட்டி ஆகும். என் அப்பா குடியிருந்து வருவது அம்மாபட்டி என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட சாட்சி சின்னத்தங்கம் என் அப்பாவின் சகோதரரின் மனைவி ஆவார். எதிரிகள் தரப்பில் மணப்பாறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்றால் அது ஒரு தலைப்பட்ச தீர்ப்பு ஆகும். அந்த வழக்கிற்கு என் அப்பா அம்மாவிற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. அந்த வழக்கில் என் அப்பா சார்பாக வழக்கறிஞர் பழனி குமார் என்பவர் முன்னிலை ஆகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் பின்னிட்டு வருகையில்லா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டார்கள் என்றால் எங்களுக்கு சாதகமாகத்தான் தீர்ப்பாகி இருக்கிறது. எதிரிகள் மீது பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் புகார் கொடுத்து அவர்களை மிரட்டி சிறையில் தள்ளி விட்டு அதன் பிறகு அவர்களுக்கு சொந்தமான இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்து நான் கட்டியிருக்கிறேன் என்றும் அந்த இடம் அவர்களுக்கு சொந்தமான இடம் என்றும் சொன்னால் சரியல்ல. பிரச்சனைக்குரிய இடத்தில் மேற்கொண்டு வில்லங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக எனது தந்தை எனது மனைவியையும் என்னையும் அவரது வீட்டில் குடியிருக்க அனுமதிக்காமல் பிரச்சனைக்குரிய இடத்தில் வைத்திருக்கிறார் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட மூன்றாவது எதிரி விஜயாவை என் மனைவி தான் குச்சியை கொண்டு தாக்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. அதற்கான வீடியோ ஆதாரம் எதிரிகள் வசம் இருக்கிறது என்றால் சரியல்ல. மூன்றாவது எதிரி விஜயா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது நானும் என் மனைவியும் என் அப்பாவும் என் உறவினர்களும் சேர்ந்து அவரை தாக்கி இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. என் மீதும் என் மனைவி மீதும் ஆறு நபர்கள் மீதும் துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.236/2024 என குற்றவழக்கு இருக்கிறது என்றால் இருக்கிறது. நான் அன்றைய தினம் கடையில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தேன். அந்த வழக்கு உண்மைக்கு மாறான வழக்கு ஆகும். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக என் மனைவியை வைத்து பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இடத்தை முன்னிட்டு ஏற்கனவே கொடுக்கப்பட்ட பட்டியல் இனத்தவர்கள் மீதான

வன்கொடுமை வழக்கு விடுதலை செய்யப்பட்ட பிறகும் உரிமையியல் வழக்கும் எதிர்களுக்கு சாதமாக முடிந்த பிறகு நான் என் மனைவியை வைத்து தொடர்ந்து பொய் புகார் கொடுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ளை காவல்துணை கண்காணிப்பாளர் என விசாரணை செய்த போது நான் கொடுக்கவில்லை என்றால் எனது கணவர் ஆவணங்கள் கொடுத்தார். ஏற்கனவே இருந்து வரும் நிலப்பிரச்சனையில் சாதியை முன் நிறுத்தி என்னை வைத்து புகார் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் எதிரிகளை மிரட்டி பணிய வைக்க வேண்டும் என்பதற்காகவும் மணப்பாறையில் குடியிருந்து வந்த என்னை அழைத்து வந்து குடியமர்த்த முயற்சித்து புகார் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே கொடுத்த புகாரும் இதே அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் முந்தைய வழக்கில் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் எதிரிகள் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த காலத்தில் அதை பயன்படுத்தி எதிரிகளுக்கு சொந்தமான இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மணப் பாறை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.204/2023 என்ற ஒரு வழக்கை முதல் எதிரியின் தகப்பனார் சின்ன அடைக்கன் என்பவர் எனது கணவரின் தகப்பனார் வெள்ளையன், இந்த வழக்கில் கண்ட சாட்சி சின்ன தங்கத்தின் கணவர் சின்னகண்ணு அவரது அண்ணன் அடைக்கன் ஆகியோர் மீது நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த தீர்ப்புரை ஆகும். அது எதிரிகள் தரப்பு சான்றாவணம் 1 ஆகும். நீதிமன்ற தீர்ப்பு படி சின்ன தங்கத்தின் இடம் சின்ன தங்கத்துக்கு என்று தீர்ப்பு ஆகி இருக்கிறது. சின்ன தங்கம் அந்த இடத்தில் போர் குழி போட்டு இருக்கிறார். நான் தவறுதலாக கூறுகிறேன் என்றும் சின்ன தங்கத்தின் இடத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரி அல்ல. நான் தற்போது முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளைத் தான் போலீசார் என்னை விசாரிக்கும் போதும் சொன்னேன். இந்த வழக்கு தொடர்பாக என்னை ஒரு மேடமும் ஒரு போலீஸ்காரரும் விசாரித்தார்கள். கடந்த 23.10.2024ம் தேதி இரவு சுமார் 7:00 மணிக்கு மேல் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். 26.10.2024ம் தேதி பகல் 12.30 மணிக்கு புகார் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் நான் புகார் கொடுத்த பிறகு காவல் துணை கண்காணிப்பாளர் தான் என்னை வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் முன்னுக்கு பின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு எதிரில்

மூன்றாவது எதிரி விஜயா, அவருக்கு சொந்தமான இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ்கூரை வீடு அமைத்து 15 வருடங்களுக்கு மேலாக அங்கு வசித்து வருகிறார் என்றால் சரிதான். 21ம் தேதியும், 22ம் தேதியும் சம்பவம் நடந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 23.10.2024ம் தேதி நடந்ததாக சொல்லப்படும் சம்பவமானது மாலை 3 மணியிலிருந்து 3.30 மணி வரை நடைபெற்றது. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் இருந்து என் மாமனார் குடியிருக்க கூடிய இடத்திற்கு நடந்து சென்றால் 10 நிமிட நேரம் ஆகும். அருகில் இருக்கக்கூடிய என் கணவரின் பெற்றோர்களுக்கு நான் ஏன் தகவல் கொடுக்கவில்லை என்றால் அந்த நேரத்தில் எனக்கு என் கணவருக்கு தான் தகவல் கொடுக்க வேண்டும் என்று தோன்றியது. சரியான போன் வசதியும் என்னிடம் கிடையாது. நான் முதல் விசாரணையில் கூறியவாறு முதல் எதிரியோ மற்ற எதிரிகளோ எந்தவிதமான சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும் என்னை சாதி பெயரைச் சொல்லி திட்டவும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக் கூடிய நாளில் மூன்றாவது எதிரி விஜயா மட்டும் தான் அவரது வீட்டில் இருந்தார் என்றும், மற்ற எதிரிகள் இல்லை என்றால் அவர்கள் வீட்டில் இருந்த ஒரு வயதானவர் தவிர மற்ற நால்வரும் இருந்தார்கள். நான் சொல்வது போல் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றால் சரி அல்ல.அன்றைய தினம் மாலை 3.40 மணிக்கு மூன்றாவது எதிரி விஜயாவை நான் என் வீட்டில் இருந்து ஒரு சவுக்கு கட்டையை எடுத்துக் கொண்டு சென்று அடித்தேன் என்று சொன்னால் தற்காப்புக்காககுச்சியை தூக்கிக்கொண்டு சென்றேன். நான் அவர்களை அடிக்கவில்லை. மூன்றாவது எதிரியை நான் தாக்கியதால் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றாரா என்றால் நான் அவரை அடிக்கவில்லை. ஆனால் அவர் அங்கு சிகிச்சைக்கு சென்றார். நான் விஜயாவை சவுக்கு கட்டையால் தாக்கியதால் அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண். 236/2024 ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மூன்றாவது எதிரி துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட பிறகு நானும் எனது கணவர் பிரபு,எனது கணவரின் தகப்பனார் வெள்ளையன், என் கணவரின் தாயார் சரோஜா, வெள்ளையனின் அண்ணன் அடைக்கனின் பேரன்கள் ரவி மற்றும் கண்ணன், ஆகிய ஆறு நபர்களும் சேர்ந்து விஜயாவையும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற அவரது கணவர் குமாரையும், தகாத வார்த்தைகளால் திட்டி குடும்பத்தோடு கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டலும் விட்டோம் என்றால் சரியல்ல. எங்கள் மீதும் காவல்துறையினர் ஒரு குற்ற

வழக்கு பதிவு செய்து நடைபெற்று வருகிறது. என்னை எதிரிகள் தாக்குவதற்கு பயன்படுத்தியதாக சொல்லக்கூடிய குச்சியை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அது அந்த இடத்திலே தான் இருந்தது. அவர்கள் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. என் கணவர் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் நீண்ட காலமாக நடைபெற்று வரும் சொத்து தகராறு காரணமாக நான் பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர் என்பதால் எதிரிகள் மீது பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர்கள் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து பொய் புகார்கள் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல . நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் கூறுவது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Apex

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.5/2025**
P.W. 2

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பிரபு |
| Father's Name | : | திரு.வெள்ளையன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 30 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் மருங்காபுரி தாலுக்கா மஞ்சம்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்துவருகிறேன். அ.சா.1 மோகனசுந்தரி எனது மனைவி ஆவார். நான் மணப்பாறையில் டீ மாஸ்டராக வேலை பார்த்துவருகிறேன். என் மனைவி இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவர் ஆவார். நான் இந்து முத்துராஜா வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் இந்து முத்துராஜா வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். நானும் எனது மனைவியும் கலப்பு திருமணம் செய்து கொண்டோம். எனது தகப்பனாருக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். நானும், எனது மனைவியும் கலப்பு திருமணம் செய்ததை என் வீட்டில் ஏற்று கொண்டு விட்டார்கள். நாங்கள் குடியிருக்கும் இடத்தில் குடியிருக்கக் கூடாது என்று ஆரம்ப காலத்தில் இருந்தே எதிரிகள் எங்களுக்கு இடையூறு செய்து வந்தார்கள். என் மனைவியைப் பார்த்து இந்த பள்ளத் தேவிடியா இருக்க கூடாது என்று எதிரிகள் கூறிவந்தார்கள். என் மனைவி ஏற்கனவே எதிரிகள் மீது பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் மீது புகார் கொடுத்தார். கடந்த 21.10.2024 அன்று சின்னகண்ணு அம்மா மாடு மேய்த்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது மணி என்ற அடைக்கன் இங்கு மாடு மேய்க்க கூடாது என்று இந்த இடம் எங்களுக்கு

Web Copy

உரியது. வீட்டை இடித்து விடுவேன் என்று கூறியிருக்கிறார். என் மனைவி என்னிடம் சொன்னதை வைத்து நான் மறுநாள் கேட்டேன். அப்போது என்னை சத்தம் போட்டு அனுப்பி விட்டார்கள். மறுநாள் நான் வேலைக்கு சென்று விட்டேன். அப்போது எனது மனைவி போன் செய்து அவளை பள்ள தேவிடியா என்று எதிரிகள் அசிங்கமாக பேசி அடித்து விட்டதாக கூறினாள். அப்போது 2.30 மணி இருக்கும். நான் உடனே கிளம்பி வந்து எனது மனைவியை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். என் மனைவி அப்போது புகார் வாக்குமூலம் கொடுத்தார். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் அன்று மாலை 3.30 மணி முதல் 4.30 மணிக்குள் வீட்டிற்கு சென்று விட்டேன். நான் வீட்டுக்குச் சென்று போய் பார்த்தபோது சின்ன தங்கம் என்பவர் மட்டும் இருந்தார். நான் குடியிருந்து வரக்கூடிய இடத்திற்கும் என் அப்பா குடியிருந்து வரக்கூடிய இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் முக்கால் கிலோ மீட்டர் இருக்கும். நான் குடியிருப்பது மஞ்சம்பட்டி ஆகும். என் அப்பா குடியிருந்து வருவது அம்மாபட்டி என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட சாட்சி சின்னத்தங்கம் என் அப்பாவின் சகோதரரின் மனைவி ஆவார். எதிரிகள் தரப்பில் மணப்பாறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்றால் அது ஒரு தலைப்பட்ச தீர்ப்பு ஆகும். அந்த வழக்கிற்கு என் அப்பா அம்மாவிற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. அந்த வழக்கில் என் அப்பா சார்பாக வழக்கறிஞர் பழனி குமார் என்பவர் முன்னிலை ஆகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் பின்னிட்டு வருகையில்லா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டார்கள் என்றால் எங்களுக்கு சாதகமாகத்தான் தீர்ப்பாகி இருக்கிறது. எதிரிகள் மீது பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் புகார் கொடுத்து அவர்களை மிரட்டி சிறையில் தள்ளி விட்டு அதன் பிறகு அவர்களுக்கு சொந்தமான இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்து நான் கட்டியிருக்கிறேன் என்றும் அந்த இடம் அவர்களுக்கு சொந்தமான இடம் என்றும் சொன்னால் சரியல்ல. பிரச்சனைக்குரிய இடத்தில் மேற்கொண்டு வில்லங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக எனது தந்தை எனது மனைவியையும் என்னையும் அவரது வீட்டில் குடியிருக்க அனுமதிக்காமல் பிரச்சனைக்குரிய இடத்தில் வைத்திருக்கிறார் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட மூன்றாவது எதிரி விஜயாவை என் மனைவி தான் குச்சியை கொண்டு

தாக்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. அதற்கான வீடியோ ஆதாரம் எதிரிகள் வசம் இருக்கிறது என்றால் சரியல்ல. மூன்றாவது எதிரி விஜயா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது நானும் என் மனைவியும் என் அப்பாவும் என் உறவினர்களும் சேர்ந்து அவரை தாக்கி இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. என் மீதும் என் மனைவி மீதும் ஆறு நபர்கள் மீதும் துவரங்குறிச்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.236/2024 என குற்றவழக்கு இருக்கிறது என்றால் இருக்கிறது. நான் அன்றைய தினம் கடையில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தேன். அந்த வழக்கு உண்மைக்கு மாறான வழக்கு ஆகும். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக என் மனைவியை வைத்து பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இடத்தை முன்னிட்டு ஏற்கனவே கொடுக்கப்பட்ட பட்டியல் இனத்தவர்கள் மீதான வன்கொடுமை வழக்கு விடுதலை செய்யப்பட்ட பிறகும் உரிமையியல் வழக்கும் எதிர்களுக்கு சாதமாக முடிந்த பிறகு நான் என் மனைவியை வைத்து தொடர்ந்து பொய் புகார் கொடுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.5/2025**
**P.W.** 3

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சின்னதங்கம் |
| Husband's/ Name | : | திரு.சின்னகண்ணு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 65 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் கரடிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் இந்து அம்பலகாரர் சாதியை சேர்ந்தவர் ஆவேன். அ.சா.1 மோகனசுந்தரியை தெரியும். அவர் இந்து பள்ளர் சாதியை சேர்ந்தவர் ஆவார். அ.சா.2 பிரபு எனது கொளுந்தனார் மகன் ஆவார். எதிரிகளை தெரியும். எதிரிகள் அனைவரும் இந்து அம்பலக்காரர் சாதியை சார்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக எனக்கு சொந்தமான காட்டில் எதிரிகள் மாடு மேய்த்தார்கள். அதை நான் சத்தம் போட்டு விரட்டினேன். இரண்டு நாட்கள் கழித்து நான் காட்டில் கீரை பிடுங்கி கொண்டு இருந்தேன். அப்போது எதிரிகளுக்கும், அ.சா.1 மோகனசுந்தரிக்கும் சண்டை நடந்தது. நான் அந்த பக்கம் போகவில்லை.எதிரிகள் அ.சா.1 மோகனசுந்தரியை பார்த்து பள்ள பறைச்சி என்று திட்டினார்கள். அ.சா.1 மோகனசுந்தரி குச்சியை எடுத்துக்கொண்டு சென்றார். ஆனால் அவரை எதிரிகள் அனைவரும் அடித்துவிட்டார்கள். அ.சா.1 மோகனசுந்தரியை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை நேரடியாக வந்து விசாரிக்கவில்லை. பிரபு மனைவி மோகன சுந்தரி மட்டும் தனியாக இருந்தாள் .அவர்களுக்குள் என்ன பேசிக் கொண்டு இருந்தார்கள் என்றால் பள்ளி பறைச்சி என்று பேசி முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். இந்த பக்கம் நான்கு பேர் இருந்தார்கள். பிரபுவின் அப்பா உடன்பிறந்தவரின் மனைவி நான் என்றால் சரிதான். என் கணவர் மீதும் பிரபுவின் அப்பா மீதும் எல்லோருக்கும் மூத்தவர் அடைக்கண் மீதும் முதல் எதிரி சின்ன அடைக்கண் வழக்கு போட்டிருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் சின்ன அடைக்கணுக்கு ஆதரவாக மணப்பாறை நீதிமன்றத்தில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அ.சா.1 மோகனசுந்தரி தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பது எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும். ஆரம்பத்தில் இருந்து அவர்கள் இருவரும் எங்கள் ஊரில் வசிக்கவில்லை. எங்கள் ஊரில் அவர்களை குடியிருக்க விட மாட்டார்கள். பிரபுவின் அப்பாவும் அம்மாவும் மோகனசுந்தரி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர்களை வீட்டில் அனுமதிப்பது கிடையாது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையில் சொத்து தொடர்பான தகராறு கடந்த 20 வருடங்களுக்கு மேல் நடைபெற்று வருவதால் பேச்சுவார்த்தை கிடையாது. என் கணவர் வைத்திருக்கும் இடம் மோகன் சுந்தரியின் மாமனார் வைத்திருக்கும் இடம் அனைத்தும் முதல் எதிரி அடைக்கண் தகப்பனார் ஆண்டியப்பன் அம்பலத்திற்கு 1955இல் அவரது சுய சம்பாத்தியத்தில் ஐந்தரை ஏக்கர் கிரயம் பெற்ற சொத்து என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தை எனது கணவரும் பிரபுவின் தகப்பனாரும் சேர்ந்து போலியாக பட்டா வாங்கி விட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த நிலம் தொடர்பாக முதல் எதிரியின் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது என் கணவருக்கு தான் தெரியும். அ.சா.1 மோகன சுந்தரி பட்டியல் வகுப்பை சேர்ந்தவர் என்பதால் அதை வைத்துக்கொண்டு எதிரிகள் மீது சாதி தொடர்பாக இழிவாக பேசியதாக வழக்கு தாக்கல் செய்து எதிரிகளை சிறைக்கு அனுப்பி எதிரிகளுக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டி இருக்கிறார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்ல கூடிய நேரம் மதியம் 3 மணி இருக்கும். சம்பவம் காட்டுக்குள் வைத்துஎதிரி விஜயாவின் வீட்டிற்கு அருகில் வைத்து நடந்தது. மோகனசுந்தரி கணவர் எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் அவர் போன் பண்ணி தகவல் சொன்ன பிறகு வந்தார். பிரபுவின் பெற்றோர் வீடு சற்று தொலைவில் உள்ளது. பிரச்சனை நடந்த உடன்

நான் பிரபுவின் பெற்றோர்களிடம் சென்று சொல்லவில்லை. எவ்வளவு நேரம் கழித்து மோகன சுந்தரி மருத்துவமனைக்கு சென்றார் என்றால் பிரபு வந்தவுடன் அழைத்துச் சென்றார். பிரபு வரும்போது நாங்கள் அங்கு இல்லை. நான் எங்கள் வீட்டிற்கு சென்று விட்டேன். பிரபு அங்கு எத்தனை மணிக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக மோகனசுந்தரியும் பிரபுவும் சொல்லிக் கொடுத்தவாறு உண்மைக்கு மாறாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. நான் அந்த இடத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல.நான் சம்பவம் கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு சென்று தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் சொன்னவாறு எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மோகன சுந்தரி தான் வீட்டிலேயே எடுத்துக் கொண்டு சென்று மூன்றாவது எதிரி விஜயாவை தாக்கியிருக்கிறார் என்றால் சரியல்ல . மூன்றாவது எதிரியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு எந்த சம்பவமும் தெரியாது என்றும் எதிரிகளை மிரட்டி பணிய வைப்பதற்காக பொய் புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றும், எனக்கும் லாபம் இருக்கிறது என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 5/2025**
**P.W.4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வராஜ் |
| Father's Name | : | திரு.வெள்ளையன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 37 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் கரடிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டீ மாஸ்டராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 26.10.2024 ம் தேதி மதியம் 1.00 மணி அளவில் நான் வீட்டிற்கு சாப்பிட சென்ற போது மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயாரித்தார். அதில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த ராசுவும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் அரசு தரப்பு சான்றவாணம் 2 ஆகும். காவல் துணை கண்காணிப்பளார் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

அ.சா.2 பிரபு என் உடன் பிறந்த தம்பி ஆவார். வீட்டிற்கும் நான் வேலை பார்க்கும் பேக்கரி கடைக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு கிலோ மீட்டர் இருக்கும். போலீசார் மோகன சுந்தரி வீட்டின் முன்பாக இருந்தார்கள். என்னுடைய பேக்கரிக்கும், மோகனசுந்தரிக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் அரைகிலோ மீட்டர் இருக்கும். எனது செல் நம்பர் மோகன சுந்தரியிடமும், பிரபுவிடமும் உள்ளதா என்றால் பிரபுவிடம் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நான் கடையில் இருந்தேன். என் தம்பி எனக்கு எந்த தகவலும் சொல்லவில்லை. என்

குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையில் சுமார் 20 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை. எதிரிகள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியும். அந்த வழக்கு எதிரிகளுக்கு சாதகமாக முடியவில்லை. ஏற்கனவே மூன்று வருடங்களுக்கு முன்பு எனது தம்பி மனைவி மோகன சுந்தரி எதிரிகள் மீது சாதி ரீதியாக கொடுமை செய்ததாக ஒரு புகார் கொடுத்து வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் எதிரிகளை சிறைக்கு அனுப்பி விட்டு எதிரிகள் இடத்தில் என் தம்பி ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்தான் என்றால் சரியல்ல. அது எங்கள் இடமாகும். எங்கள் அப்பா பெயரில் உள்ள சொத்தை நான் தான் என் தம்பிக்கு விட்டுக்கொடுத்து விட்டேன். எங்களுக்குள் முறையாக பாகபிரிவினை செய்து கொள்ளவில்லை. நான் சொல்லும் நாளில் சொல்லும் விதத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர் வரைபடம் தயாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் சேர்ந்து கையொப்பம் செய்ததாக கூறியுள்ள நபர் எனது உறவினர் ஆவார். நாங்கள் இருவரும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஓம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.